1

# வசனப் பகுதியின் பெரிய சந்தர்ப்பப் பொருளைக் கண்ணோக்குதல்

ஒரு வசனப்பகுதிக்கு விளக்கம் அளிக்க நாம் தயாராக இருக்கும்போது, எங்கிருந்து நாம் தொடங்குகிறோம்? அதன் சந்தர்ப்பப் பொருளுடன் தொடங்குகிறோம். பழங்கூற்று ஒன்று, ‘‘சந்தர்ப்பப் பொருளில் இருந்து பிரித்து எடுக்கப்படும் ஒரு வசனப்பகுதி எந்த ஒரு விஷயத்தையும் மறைக்கும் போலிப்பகட்டாகக் கூடும்’’ என்று எச்சரிக்கிறது. ஆகையால், ‘‘ஒரு வசனப்பகுதிக்கு, எப்போதும் அதன் சந்தர்ப்பப் பொருளில் விளக்கம் அளியுங்கள்’’ என்பது வேதாகமம் அர்த்தப்படுத்துவது என்ன என்பதைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதில் மிகவும் முக்கியமான விதியாக உள்ளது.

வசனத்தில் உள்ள வார்த்தைகளை விளக்கப்படுத்துவதன் மூலம் நாம் விளக்கம் அளித்தலைத் தொடங்கக் கூடாது என்பது அந்த விதியின் ஒரு விளைவாக உள்ளது. அதற்குப் பதிலாக நாம், அவ்வசனம் காணப்படும் சந்தர்ப்பப் பொருளை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இந்தப் பாடத்தில் நாம், ‘‘பெரிய சந்தர்ப்பப் பொருளை’’ ஆய்வுசெய்வதன் மூலம் அந்த நிறைவை எவ்வாறு நாம் நிறைவேற்றத் தொடங்க முடியும் என்று கலந்துரையாடுவோம்.

‘‘பெரிய சந்தர்ப்பப் பொருள்’’ என்றால் என்ன?

## வேதாகமம் முழுவதும்

முதலாவது நாம், ஒவ்வொரு வசனத்தையும், வேதாகமம் முழுவதிற்குமான சந்தர்ப்பப் பொருளில் புரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும். ஒரு சித்திரத்தை நாம் மதிப்பிடும் அதே வகையில் வேதாகமத்திற்கும் நாம் விளக்கம் அளிக்க வேண்டும். ஒரு சித்திரத்தை அல்லது வேறொரு கலைப்பணியை நாம் கண்ணோக்குகையில், முதலில் நாம் அதன் விபரங்களைக் கண்ணோக்குகிறோமா? இல்லை, நாம் அந்தச் சித்திரத்தை முழுமையாகக் கண்ணோக்குகிறோம். அதை முழுவதுமாக மதித்துணர்ந்த பின்பு நாம், அதில் உள்ள சிறு விபரங்களை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட தூரிகை வீச்சுகள் போன்ற அதன் பாகங்களைக் கண்ணோக்கத் தொடங்குகிறோம். அதுபோலவே, வேதாகமத்தில் உள்ள ஒரு வசனத்தைப் புரிந்துகொள்வதற்கும் மதித்துணர்வதற்கும் நாம், வேதாகமம் முழுமையையும் கண்ணோக்கி, அதன் பின்பு நாம் படிக்கும் வசனப்பகுதியானது அந்த முழுச்சித்தரிப்பிற்கு எவ்வாறு பங்களிக்கிறது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

வேதாகமம் என்பது - தேவன் என்ற - ஒரே எழுத்தாளரைக் கொண்டுள்ளது.

இது - இயேசு கிறிஸ்து என்ற - ஒரு பிரதான பாத்திரத்தைக் கொண்டுள்ளது. மேலும் இது பின்வரும் ஒரு பிரதான வரலாற்றைக் கூறுகிறது: ஏதேன் தோட்டத்தில் பாவத்தினால் தேவனிடத்தில் இருந்து பிரிக்கப்பட்டு உள்ள மனித இனத்தை, இயேசு கிறிஸ்துவின் மூலம் அளிக்கப்பட்டுள்ள மீட்பின் வழியாகத் தேவன் எவ்வாறு தம்மிடத்தில் திரும்பக் கொண்டு வருகிறார் என்பதே அந்தப் பிரதான வரலாறு ஆகும்.

விளக்கவுரையாளர்களுக்கு, வேதாகமம் என்பது பின்வருபவற்றைக் கருத்தாகத் தெரிவிக்கும் ஒரு புத்தகமாக உள்ளது: (1) நாம் விளக்கம் அளிக்கும் வசனப்பகுதி மீட்பின் முழுவரலாற்றிற்கு எவ்வாறு பங்களிக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். (2) தனியொரு வசனப்பகுதிக்கு விளக்கம் அளித்தலானது வேதாகமம் முழுவதிலும் போதிக்கப்பட்டுள்ள கருத்திற்கு இசைவிணக்கமாக இருக்க வேண்டும்.[1] எடுத்துக்காட்டாக, ஆபிரகாம் தமது மகன் ஈசாக்கைப் பலியிட வேண்டும் என்று அவரிடம் தேவன் கூறினார் (ஆதியாகமம் 22:1-14). வேதாகமத்தில் அனுபவமற்ற ஒரு மாணவர், இந்த நிகழ்வில் இருந்து, தேவன் மனித பலியை அங்கீகரிக்கிறார் என்றும் அவர் ஆபிரகாமிடம் கேட்டுக்கொண்டது போன்றே இன்றைய நாட்களிலும் மக்களிடத்தில் மனிதப்பலி செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறார் என்றும் அம்மாணவர் முடிவெடுக்கச் சாயக்கூடும். இருப்பினும், வேதாகமம் முழுவதிலும் நன்கு பழக்கம் உள்ள ஒருவர், தேவன் மனித பலியை அங்கீகரிப்பதில்லை என்பதைப் புரிந்துகொள்கிறார்; அந்த உண்மையை அறிதலானது, அவர் ஆபிரகாமுக்குத் தேவனுடைய கட்டளைக்கு எவ்வாறு விளக்கம் அளிக்கிறார் என்பதன் மீது செல்வாக்குச் செலுத்த முடியும்.

## பழைய அல்லது புதிய ஏற்பாடு

இரண்டாவதாக நாம், ஒரு வசனப்பகுதியைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யும்போது, அவ்வசனப் பகுதி பழைய ஏற்பாட்டில் காணப்படுகிறதா அல்லது புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

வேதாகமம் ஒரே புத்தகமாக இருக்கையில், அது இரு புத்தகங்களாகவும் இருக்கிறது: பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு. மனிதன் எவ்வாறு பாவம் செய்தான் என்றும் பின்பு தேவன் எவ்வாறு ஆபிரகாமை அழைத்ததன் மூலம், வீழ்ந்து போன மனிதகுலத்தை இரட்சிக்க ஆயத்தம் செய்தார் என்பதைப் பற்றியும் பழைய ஏற்பாடு கூறுகிறது. அது, மேசியா வரவிருந்த மக்களினத்தை அவர் ஆபிரகாமில் இருந்து எவ்வாறு உருவாக்கினார் என்பதையும் பின்பு அவர் வரவிருந்த மேசியாவுக்காக இந்த உலகத்தை எவ்வாறு ஆயத்தம் செய்தார் என்பதையும் கூறுகிறது. பழைய ஏற்பாடு இஸ்ரவேல் மக்களைப் பற்றியும், இஸ்ரவேல் மக்களுக்காகவும் எழுதப்பட்டது. புதிய ஏற்பாடு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா வந்தது எவ்வாறு என்பதைக் கூறுகிறது. இது அவரது வாழ்வு, மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவற்றை விவரிக்கிறது; இது அவர் தமது சபையை எவ்வாறு நிலைநாட்டினார் என்பதை விவரிக்கிறது; இது அவர் சபையிடம் எதை எதிர்பார்க்கிறார் என்பதைக் கூறுகிறது; மற்றும் இது கிறிஸ்து மறுபடியும் வருவார் மற்றும் அவர் தமது மக்களை மீட்பார் என்றும் வாக்களிக்கிறது. புதிய ஏற்பாடு கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்காகவும் அவர்களைப் பற்றியும் எழுதப்பட்டது.

*ஒரு வசனப் பகுதியானது அது காணப்படும் ஏற்பாட்டின் வரலாற்றிற்கும் நோக்கத்திற்கும் எவ்வாறு தொடர்புபடுகிறது என்று நாம் கேட்க வேண்டும். வேதவசனங்களை நடைமுறைப்படுத்துவதில் நாம், பழைய ஏற்பாட்டுக் கட்டளை அல்லது உதாரணம் இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களைக் கட்டுவிக்கிறது என்று யூகிப்பதைத் தவிர்க்க வேண்டும். பழைய பிரமாணம் நியாயப்பிரமாணத்துடன் எடுக்கப்பட்டு விட்டது, மற்றும் கிறிஸ்து கூறியுள்ளவற்றை இன்றைய நாட்களில் மக்கள் கேள்விப்பட்டு அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது (காண்க கலாத்தியர் 3:24, 25; எபேசியர் 2:15; எபிரெயர் 1:1, 2; 8:13).[2]*

## இலக்கியத்தின் வகைகள்

*மூன்றாவதாக, வேதாகமத்தின் புத்தகங்களில் பல்வேறு வகைகளில் மேலோங்கியுள்ள மாறுபட்ட இலக்கிய வகைகள் அடங்கி இருப்பதால்,[3] நாம் படிக்கும் வசனப்பகுதி பழைய அல்லது புதிய ஏற்பாட்டின் எந்தப் பகுதியில் காணப்படுகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணம், வரலாறு, பாடல் மற்றும் ஞான இலக்கியங்கள், மற்றும் தீர்க்கதரிசனம் ஆகியவை அடங்கியுள்ளன. புதிய ஏற்பாட்டில் நற்செய்திகள் அல்லது (இயேசுவின்) வரலாற்று நூல்கள், வரலாறு (நடபடிகள்); நிருபங்கள் (கடிதங்கள்) மற்றும் தீர்க்கதரிசனம் என்று அடிக்கடி வகைப்படுத்தப்படும் வெளிப்படுத்தின விசேஷம் என்ற ஒரு புத்தகம் ஆகியவை உள்ளடங்கி இருக்கின்றன.*

*இலக்கியத்தின் வெவ்வேறு வகைகள் ஒரே மாதிரியாகக் கையாளப்பட முடியாது என்பதால், இந்த வித்தியாசங்கள் முக்கியமானவையாக உள்ளன. ஒவ்வொரு வசனப் பகுதியும் நியாயப்பிரமாணம் என்ற வகையில் இருப்பதாக கண்ணோக்கப்பட முடியாது.*

## புத்தகங்களின் தொகுப்பு

*நான்காவதாக, ஒரு வசனப்பகுதியின் பெரிய சந்தர்ப்பப் பொருளானாது வேதாகமத்தில் உள்ள ஒரு புத்தகத்தைக் காட்டிலும் அதிகமானவற்றை உள்ளடக்கி இருக்கலாம். ஒரே எழுத்தாளரால் ஒரேவகையான பெற்றுக்கொள்பவர்களுக்கு எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டின் இரு புத்தகங்களைப் படிப்பதில் - லூக்கா மற்றும் அப்போஸ்தலர் நடபடிகள், 1 மற்றும் 2 கொரிந்தியர், 1 மற்றும் 2 தெசலோனிக்கேயர், மற்றும் 1 மற்றும் 2 தீமோத்தேயு போன்றவற்றைப் படிப்பதில் - ஒவ்வொரு வசனப் பகுதியும் இரு புத்தகங்களின் வெளிச்சத்திலும் விளக்கம் அளிக்கப்பட வேண்டும். பழைய ஏற்பாட்டில் முதல் ஐந்து புத்தகங்களான, பஞ்சாகமங்கள், மோசே என்ற ஒரே எழுத்தாளரால் எழுதப்பட்டன. ஆகையால், பஞ்சாகமங்கள் எதிலாவது காணப்படும் எந்த வசனப்பகுதிக்கும், பஞ்சாகமங்கள் முழுவதுமே பெரிய சந்தர்ப்பப் பொருளாக உள்ளன.*

*மேலும் பழைய ஏற்பாட்டின் வரலாற்றுப் புத்தகங்களில், பெரிய சந்தர்ப்பப் பொருளானது அடிக்கடி, தனிப்புத்தகங்களுக்கு அப்பால் விரிவாகிறது. சில விஷயங்களில் - 1 மற்றும் 2 சாமுவேல், 1 மற்றும் 2 இராஜாக்கள், மற்றும் 1 மற்றும் 2 நாளாகமங்கள் ஆகியவற்றைப் போன்றவற்றில் - தொடக்க காலத்தில்*

இரு புத்தகங்களும் ஒரு புத்தகமாகவே இருந்தன. அத்துடன் கூடுதலாக, யோசுவா, நியாயாதிபதிகள், சாமுவேல் மற்றும் இராஜாக்கள் ஆகிய புத்தகங்கள் ஒருசேர எழுதப்பட்டன அல்லது பதிப்பிடப்பட்டன மற்றும் இவை ஒரு அலகு என்பதாக நினைக்கப் பட்டன. (அவைகள் எபிரெய வேதாகமத்தில் "முந்திய தீர்க்கதரிசிகள்" என்று அழைக்கப் பட்டுள்ளன.) இந்தப் புத்தகங்கள் - இவற்றில் தொடக்ககால பாடங்கள் அடங்கி இருந்தாலும் - ஒரே வேளையில், அதாவது கி. மு. ஆறாம் நூற்றாண்டின் மத்தியில் எழுதி முடிக்கப்பட்டன என்பது தெளிவு. நாம், "இந்தத் தொகுப்பு ஒரு ஆய்வுக் கருத்தை அல்லது ஒருங்கமைக்கும் கொள்கையைக் கொண்டுள்ளதா?"; "முற்றிலுமான திட்டம் ஏதேனும் உள்ளதா?" என்று கேட்க வேண்டும். கானான் நாட்டிற்குள் நுழைதலில் தொடங்கி பாபிலோனிய அடிமைத்தனத்துடன் இந்தப் புத்தகங்கள் முடிகின்றன. இவைகள் "(கானான்) நாட்டில் இஸ்ரவேல் மக்களின் வரலாறு: நுழைதலில் இருந்து வெளியேறியது வரையில்" என்று அழைக்கப்பட முடியும். அந்த உண்மையை நாம் உணர்ந்தறிந்தால், இவைகள் யாவையும், பின்வரும் ஒருபாடத்தைப் போதித்தல் அல்லது மறுவலியூட்டுதலை நோக்கங் கொண்டிருந்தன என்று நாம் காணுகிறோம்: இஸ்ரவேல் மக்கள் நியாயப்பிரமாணத்தின்படி வாழ்ந்திருந்தால், அவர்கள் (கானான்) நாட்டில் தொடர்ந்து வாழ அனுமதிக்கப்பட்டிருப்பார்கள். இருப்பினும், இஸ்ரவேல் மக்கள் நியாயப்பிரமாணத்தின்படி வாழ மறுத்தனர், ஆகையால் அந்த மக்கள் (கானான்) நாட்டில் இருந்து கூட்டிச் செல்லப்பட்டனர். இந்தப் புத்தகங்கள் எதிலாவது உள்ள எந்தச் செய்தியும், இந்த முற்றான ஆய்வுக்கருத்தின் வெளிச்சத்தில் புரிந்துகொள்ளப்படவேண்டும்.

## தனிப் புத்தகம்

ஒரு வசனப்பகுதி எந்தப் புத்தகத்தில் காணப்படுகிறதோ, அந்தப் புத்தகத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தல் என்பது பெரிய சந்தர்ப்பப் பொருளின் நிறைவான மற்றும் மிகமுக்கியமான அம்சமாக நமக்குள்ளது. ஒரு கருத்தில் வேதாகமம் என்பது ஒரு புத்தகமாக உள்ளது, மற்றும் இன்னொரு கருத்தில் இரு புத்தகங்களாக உள்ளது, மற்றும் வேதாகமம் என்பது ஏறக்குறைய நாற்பது மாறுபட்ட எழுத்தாளர்களால் தோராயமாக 1,500 ஆண்டுகள் கால இடைவெளியில் எழுதப்பட்ட அறுபத்தி ஆறு புத்தகங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு எழுத்தாளரும் தேவனால் ஏவப்பட்டு இருந்தாலும், ஒவ்வொருவரும், குறிப்பிட்ட ஒரு நோக்கத்தைச் சாதிப்பதற்காக குறிப்பிட்ட ஒரு வரலாற்றுச் சூழ்நிலையில் எழுதினர்.[4] ஆகையால், ஒவ்வொரு புத்தகமும், அது எழுதப்பட்ட வரலாற்றுச் சூழ்நிலை, மற்றும் எழுத்தாளரின் நோக்கம் மற்றும் யாருக்கு எழுதப்பட்டதோ அந்த மக்கள் ஆகியவற்றின் வெளிச்சத்தில் விளக்கம் அளிக்கப்பட அல்லது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இந்த இலக்கை நிறைவேற்றுவதற்கு நாம், புத்தகத்தை முழுமையானதாகக் கண்ணோக்கவும் அதன் முதல் வாசகர்களுக்கு அது கொண்டிருந்த செய்தியைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யவும் வேண்டும். முழுமையான வகையில் புத்தகத்திற்கு பழக்கமானதற்குப் பின்னர், நாம் வாசிக்கும் வசனப்பகுதி அந்தப் புத்தகத்திற்கு எவ்வாறு பங்களிக்கிறது என்று காண்பதற்காக அவ்வசனப் பகுதியை விளக்கப்படுத்துவதற்கு அதை நாம் நெருக்கமாகக் கண்ணோக்கத் தயாராகிறோம்.

**ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கேள்விகள்**

*முழுமையானது என்ற வகையில் புத்தகத்தைப் புரிந்துகொள்வதற்கு நாம், பின்வருவன போன்ற அறிமுகக் கேள்விகளை ஆழ்ந்து சிந்தித்தல் அவசியமாகிறது:*

*1. எழுத்தாளர்: அதை எழுதியது யார்?*

*2. தேதி: அது எப்போது எழுதப்பட்டது?*

*3. பெற்றுக்கொண்டவர்கள்: அது யாருக்கு எழுதப்பட்டது?*

*4. இடம் (இடங்கள்): அதை எழுதியபோது எழுத்தாளர் எங்கே இருந்தார்? அந்தப் புத்தகத்தைப் பெற்றுக்கொண்டபோது அல்லது வாசித்தபோது, அதைப் பெற்றுகொண்டவர்கள் எங்கே இருந்தனர்?*

*5. வரலாறு: அந்தப் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்ட நிகழ்வுகள் எப்போது மற்றும் எவ்வாறு நிகழ்ந்தன? அந்தப் புத்தகம் எழுதப்பட்ட வரலாற்றுச் சூழ்நிலைகள் யாவை? அதை எழுதுவதற்கான நிகழ்வு என்னவாக இருந்தது?*

*6. இலக்கிய வகை அல்லது பாணி: அந்தப் புத்தகத்தில் காணப்படும் இலக்கிய வகை என்ன?*

*7. நோக்கம், குறிக்கோள்: "ஏன்?" என்பது மிகவும் முக்கியமான கேள்வியாக உள்ளது: "அந்தப் புத்தகம் எழுதப்பட்டது ஏன்?" அதன் எழுத்தாளர் மனதில் கொண்டிருந்த நோக்கம் என்ன? அவர் எதைச் சாதிக்க நம்பிக்கையாயிருந்தார்? அவரது குறிக்கோள் என்ன?முழுமையானது என்ற வகையில் அந்தப் புத்தகத்தின் நோக்கத்தைப் பற்றிய சில கருத்தை நாம் கொண்டிராவிட்டால், அந்தப் புத்தகத்தில் உள்ள எந்த ஒரு வசனப்பகுதிக்கும் விளக்கம் அளிக்க நாம் தயாராக இருப்பதில்லை!*

*8. செய்தி, ஆய்வுக்கருத்து: செய்தியானது புத்தகத்தின் முதன்மைக் கருத்து அல்லது ஆய்வுக்கருத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. சில விஷயங்களில், இவ்விரண்டும் ஒன்றாகவே இருக்கலாம்; ஆனால் பலவிஷயங்களில் இவைகள் ஒன்றில் இருந்து ஒன்று வித்தியாசப்படக்கூடும். எழுத்தாளர் சாதிக்க நம்பிக்கையாக இருந்த விஷயம் நோக்கமாக உள்ளது. அவர் அதை எவ்வாறு சாதிக்க விரும்பினார் என்பது செய்தியாக, ஆய்வுக்கருத்தாக அல்லது முதன்மைக் கருத்தாக உள்ளது.[5]*

*9. வரைகுறிப்பு: புத்தகத்தின் பொருளடக்கம் எவ்வாறு வரைகுறிப்பிடப்பட முடியும்? அதன் வடிவமைப்பு என்ன? ஒரு புத்தகத்திற்கு வரைகுறிப்பை வடிவமைத்தல் என்பது அந்தப் புத்தகம் முழுமையும் எதைப்பற்றியது என்று கண்ணோக்குவதை நமக்குச் சுலபமானதாக ஆக்குவது மட்டுமின்றி அது, முற்றான ஆய்வுக்கருத்து அந்தப் புத்தகம் முழுவதிலும் எவ்வாறு மேம்படுத்தப்பட்டுள்ளது என்று நமக்குக் காண்பிக்கவும் செய்கிறது.*

*இந்தக் கேள்விகள் யாவையும் எல்லாப் புத்தகங்களுக்கும் சமமாக நடைமுறைப் படுத்தப்படக் கூடியவைகள் அல்ல. சில புத்தகங்கள் எழுத்தாளர்களின் பெயர் அறியப்படாதவைகளாக உள்ளன; சில (சங்கீதங்கள் மற்றும் நீதிமொழிகள்) கால இடைவெளியில் எழுதப்பட்டன; சில புத்தகங்கள் வரைகுறிப்பிடுவதை அறைகூவல் விடுப்பவையாக அல்லது சாத்தியமற்றதாக்குபவைகளாக உள்ளன; சிலவற்றைப் பொறுத்த மட்டில், அவை எழுதப்பட்ட காலம் அல்லது அதைப் பெற்றுக்கொண்டவர்கள் அல்லது*

வரலாற்றுரீதியான சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பற்றி எதுவும் நிச்சயமாகக் கூறக் கடினமானவைகளாக உள்ளன. இருப்பினும் ஒரு புத்தகத்தை வாசிப்பதன் மூலம் அதன் நோக்கம் மற்றும்/அல்லது அதன் ஆய்வுக்கருத்து ஆகியவற்றைப் பற்றிய சில முடிவுகளை நாம் எப்போதும் அடைய முடியும். மற்றும், ஒரு புத்தகம் எழுதப்பட்ட சூழ்நிலைகளைக் கண்டறிய முயற்சி செய்வதன் மீது செலவிடப்படும் பிரயாசம் அந்தப் புத்தகத்திலிருந்து நாம் விளக்கவுரை அளிக்கும்போது நமக்கு உதவும்.

***விளக்கம் அளிப்பதில் அறிமுகரீதியான ஆழ்ந்த சிந்தனைகளைப் பயன்படுத்துதல்: மூன்று உதாரணங்கள்***

முழுமையாக ஒரு புத்தகத்தை உற்றுநோக்குதல் விளக்கம் அளிப்பதன் மீது எவ்வாறு செயல்விளைவை ஏற்படுத்தும் என்பதை விவரிப்பதற்கு, பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் இருந்து எடுக்கப்பட்ட மூன்று உதாரனங்கள் பின்தொடருகின்றன. இந்த உதாரணங்கள், ஒரு புத்தகத்தை எழுதியது யார் மற்றும் அந்தப் புத்தகத்தில் உள்ள எந்த ஒரு வசனப்பகுதியையும் புரிந்துகொள்ளுதலில் மேன்மையான பணியைச் செய்வதில் நமக்கு உதவ முடியும் என்று செயல்விளக்கப்படுத்துகின்றன.

*வெளிப்படுத்தின விசேஷம்.* வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகத்தைப் பற்றி நாம் நினைப்பதன் மூலம், முடிவில் இருந்து நாம் தொடங்குவோமாக. வேதாகமத்தின் வேறு எந்தப் புத்தகமும் இதைக் காட்டிலும் அதிகமாக மாறுபட்ட விளக்கவுரைகளுக்கு உட்பட்டிருப்பதில்லை. அறிமுகரீதியான விஷயங்களைப் பற்றிய கவனம் நிறைந்த படிப்பில் இருந்து நாம் அறியக்கூடியது ஏதேனும் இருக்குமென்றால், அது விளக்கம் அளிக்கும் சாத்தியங்களைக் குறுக்குவதாக இருக்குமா?

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது, துன்பப்பட்டுக் கொண்டிருந்ததைப்பற்றி உபத்திரவப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த சபைக்கு எழுதப்பட்டது. உபத்திரவப்பட்ட இந்த சபைக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் அளிப்பதற்கென்று இது எழுதப்பட்டது என்பது இதன் பொருளடக்கங்களில் இருந்து தெளிவாகிறது. அந்த உண்மையைப் பற்றிய தனிச்சிறப்பு என்னவாக உள்ளது? இந்தப் புத்தகம் முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. இது இந்தக் கிறிஸ்தவர்களுக்குச் செய்தியொன்றைக் கொண்டிருந்தது. அவர்கள் இதைப் புரிந்துகொண்டு, இந்தப் புத்தகத்தில் தாங்கள் வாசித்தவற்றிற்கு ஒரு கருத்தில் கீழ்ப்படிய வேண்டியவர்களாக இருந்தனர். வெளிப்படுத்தின விசேஷம் 1:3ம் வசனம், “இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது” என்று கூறுகிறது. இத்துடன் வெளிப்படுத்தின விசேஷம் 22:7ம் வசனம் “இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான்” என்றும் கூடுதலாகக் கூறுகிறது.

விளக்கம் அளித்தலுக்கு இந்த உண்மைகள் அர்த்தப்படுத்துவது என்ன? இவைகள் குறைந்த பட்சம் பின்வருவதை அர்த்தப்படுத்துகின்றன: *ஒரு புத்தகத்தை முதலில் வாசித்தவர்களுக்கு முற்றிலும் கருத்தை ஏற்படுத்தியிராத*

*எந்த விளக்கமும் ஒரு சரியான விளக்கமாக இருக்க முடியாது.*

முதல் வாசகர்களைப் பற்றியும் அவர்கள் புத்தகத்திற்கு எவ்வாறு பதில் செயல் செய்தனர் என்பதைப் பற்றியும் மாத்திரம் நினைத்தல், அந்தப் புத்தகம் எவ்வாறு விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றிய குறிப்பிட்ட அளவுகோல்களை நிலைநாட்ட உதவுவதில் போதுமானதாக உள்ளது: முதல் வாசகர்கள் - உபத்திரவப்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் - அதை எவ்வாறு புரிந்து கொண்டிருக்க முடியும், மற்றும் அவர்கள் வாசித்தவற்றிற்கு ஒரு கருத்தில் அவர்கள் எவ்வாறு கீழ்ப்படிந்திருக்க முடியும் என்ற வகையில் இது விளக்கம் அளிக்கப்பட வேண்டும்.

*பிரசங்கி.* அடுத்ததாக நாம், பிரசங்கியின் புத்தகத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போமாக. பிரசங்கியின் புத்தகமானது பழைய ஏற்பாட்டில் உள்ள பாடல் புத்தகங்களில் ஒன்றாக உள்ளது; அது ஞான இலக்கியம் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. வாழ்வின் மாயையை - அர்த்தமற்ற தன்மையை அல்லது வீணான தன்மையை - விவரித்தல் என்பதே இந்தப் புத்தகத்தின் நோக்கமாக உள்ளது. எழுத்தாளர், "மாயை, மாயை, எல்லாம் மாயை" என்று கூறுவதன் மூலம் இந்தப் புத்தகத்தைத் தொடங்குகிறார் (பிரசங்கி 1:2). பின்பு அவர், மனிதர் தங்கள் வாழ்வில் செய்கிற பெரும்பான்மையான விஷயங்கள் யாவையும் முடிவில் மாயையாகின்றன என்று கூறச் சென்றார் (காண்க 1:17; 2:11, 17, 19, 21, 23, 26; 3:19; 4:4, 7, 16; 6:2; 7:6). எழுத்தாளர் தமது விவாதங்களை ஏற்படுத்துவதற்கு, "சூரியனுக்குக் கீழே" - அதாவது தேவனை விட்டுப் பிரிந்த நிலையில் - வாழ்வைக் கண்ணோக்கினார் (உதாரணமாக, காண்க 6:12). நாம் வாழ்வையும் "சூரியனுக்குக் கீழே" இந்த உலகத்தையும் கண்ணோக்குகிறபோது, அது சிறிதளவே கருத்தை ஏற்படுத்துகிறது அல்லது கருத்து எதையும் ஏற்படுத்துவதில்லை. இந்தப் புத்தகம் முழுவதும் இதன் கடைசி பத்தியை நோக்கிக் கட்டி எழுப்பப்பட்டுள்ளது, அந்தப் பத்தி, "... தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே ..." என்று கூறுகிறது (12:13, 14).

இந்தப் புத்தகத்தின் முற்றான நோக்கமும் ஆய்வுக்கருத்தும் தெளிவாக உள்ளது. அந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே இந்தப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு விஷயமும் விளக்கம் அளிக்கப் படவேண்டும். இதன் விளைவாக, இந்தப் புத்தகத்தில் உள்ள வசனப்பகுதிகள் அவற்றின் சந்தர்ப்பப் பொருளை விட்டு வெளியே எடுக்கப்படுதலோ அல்லது வேறு எதையாவது நிரூபிக்க முயற்சி செய்வதில் பயன்படுத்தப்படுதலோ கூடாது. உதாரணமாக, பிரசங்கி 9:5ம் வசனம், "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" என்று கூறுகிறது. அந்தக் கூற்று, ஒருவர் இறக்கும்போது அவர் இருப்பதில் இருந்து ஒழிகிறார் அல்லது அவரது ஆத்துமா நியாயத்தீர்ப்பின் நாள் வரையிலும் உறங்குகிறது என்பதை நிரூபிக்கிறதா? இல்லை, ஏனென்றால் எழுத்தாளர் "சூரியனுக்குக் கீழே" உள்ள வாழ்வைப் பற்றி - தேவனைப் பற்றி நினைக்காமல் பூமியின் மீது வாழும் ஒருவரைப் பற்றி - விவரித்தார். பூமிக்குரிய நிலைப்பாட்டில் இருந்து நாம் ஒரு இறந்த உடலைக் கண்ணோக்கினால், "இறந்தவர்கள் ஒன்றும் அறிவதில்லை; அவர்கள் இனியும் உணர்வுடன் இருப்பதில்லை" என்றே முடிவு செய்வோம். வேறொரு இடத்தில் வேதாகமம் போதிப்பது என்ன என்பதை நாம் அறிந்திருப்பதால், மரித்தவர்கள் பற்றிய வேதாகம ரீதியான போதனையை,

இப்படிப்பட்ட கூற்றானது மிகச்சரியாகப் பிரதிபலிப்பது இல்லை என்பதையும் நாம் அறிகிறோம். ஆகையால் ஒருவர், "ஆத்துமா உறக்கம்" பற்றிப் பிரசங்கி புத்தகத்தில் இருந்து நிரூபிக்க முயற்சி செய்யக் கூடாது. அவ்வாறே, ஒரு புத்தகம் தெளிவாகப் போதிக்கும் பாடத்தைத் தவிர, அந்தப் புத்தகத்தில் இருந்து வேறு உபதேசம் எதையும் நிரூபிக்க முயற்சி செய்யக் கூடாது.

*ஆதியாகமம்.* இப்போது நாம் பழைய ஏற்பாட்டின் முதல் புத்தகமான ஆதியாகமத்தைக் கண்ணோக்குவதன் மூலம் தொடக்கத்தைக் கொண்டு முடிப்போமாக. ஆதியாகமத்திற்கு நாம் ஒரு அறிமுக உரை எழுதவேண்டும் என்றால், இந்தப் புத்தகத்தை எழுதியது யார், இது எப்போது எழுதப் பட்டது, மற்றும் இதுபோன்ற அக்கறைக்குரிய பிற விஷயங்களைப் பற்றிக் கலந்துரையாடுவோம். இருப்பினும், "இது ஏன் எழுதப்பட்டது?" அல்லது "இதன் நோக்கம் என்னவாக உள்ளது?" என்பதே கேட்பதற்கு மிகவும் முக்கியமான கேள்வியாக உள்ளது எனலாம். இதன் முதன்மைச் செய்தியை அடையாளப்படுத்தவும் அதிலிருந்து இதன் முதல் வாசகர்கள் பெற்றுக்கொண்டது என்ன என்பதை அறியவும் நாம் முயற்சி செய்வோம்.

இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் ஆதியாகமத்தை வாசித்து அதற்கு விளக்கம் அளிக்கும் போது, சட்டப்படி அவர்கள், அந்தக் கேள்விகளைக் கேட்பவர்களாகக் காணப்படுவதில்லை. விசுவாசத்தின் உதாரணங்களுக்காக அவர்கள் அதை வாசிக்கின்றனர். ஆதியாகமத்தில் இதுபோன்ற உதாரணங்கள் அடங்கியுள்ளன (காண்க எபிரெயர் 11), ஆனால் ஆதியாகமத்தில் விசுவாசத்திற்கு மாபெரும் உதாரணமாக இருப்பவர் - ஆபிரகாம் - கூட தவறு செய்யக் கூடியவராக இருந்ததாகக் காண்பிக்கப்படுகிறது. அவர் அவ்வப்போது விசுவாசம் இல்லாதவராக இருந்தார். அந்த உண்மை, ஆதியாகமம் இன்றைய நாட்களில் நமக்கு விசுவாசத்தின் உதாரணங்களை அளித்தல் என்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது என்ற கருத்தைப் பற்றி நாம் கேள்வி கேட்கச் செய்கிறது.

இன்றைய நாட்களில் ஆதியாகமத்தை நாம் கையாளச் சாயும் விதத்தில் இன்னொரு விளக்கம் அளித்தல் தவறு காணப்படுகிறது. ஆதியாகமத்தின் முதல் இரண்டு அதிகாரங்களை நாம் விளக்கப்படுத்தும்போது, ஆதியாகமம் 1ம் அதிகாரம் தோற்றங்கள் பற்றிய உண்மை விபரங்களாக உள்ளது, அதேவேளையில் பரிணாமக் கோட்பாடு தோற்றங்கள் பற்றிய தவறான விபரமாக உள்ளது என்பதை நிரூபிப்பதில், நமது பெரும்பான்மையான நேரத்தை நாம் செலவிடுகிறோம். அந்தச் செயல்முறை ஒரு நல்ல விளக்கம் அளித்தலாக உள்ளதா?

பரிணாமக் கோட்பாட்டைப் பற்றி நாம் கலந்துரையாடும்போது, ஆதியாகமம் 1 மற்றும் 2 ஆகிய அதிகாரங்களை தவிர்க்க இயலாத வகையில் நாம் வாசிப்போம். இருந்தபோதிலும் நாம், அந்த வசனப் பகுதியைப் புரிந்துகொள்வதும் அதை விளக்கப்படுத்துவதும் நமது முதன்மை நோக்கமாக இருக்கும் போது, பரிணாமக் கோட்பாட்டை மறுத்துரைப்பது அவசியமாக இல்லையா என்று நம்மை நாமே கேட்டுக் கொள்வது தேவையாக உள்ளது. இந்தப் புத்தகத்தின் முதல் வாசகர்கள் பரிணாமக் கோட்பாட்டின் மீது நம்பிக்கை கொண்டிருப்பார்களா? அவர்கள் அவ்வாறு கொண்டிருப்பார்கள் என்பது சாத்தியமற்றதாக உள்ளது; பழங்காலத்தில் வாழ்ந்த ஒவ்வொருவரும்

இந்த அண்டம் மேலான இயற்கையினால் தோன்றியது என்று நம்பினர்.

எனவே, ஆதியாகமத்தை எழுதியவர் 1 மற்றும் 2ம் அதிகாரங்களில், தாம் முன் வைத்த தோற்றங்கள் பற்றிய இயற்கைக்கு மேலான கண்ணோட்டத்தை, அற்புதத்தை மறுக்கும் கண்ணோட்டத்திற்கு நேரெதிராக்குதல் என்பதைத் தமது நோக்கமாகக் கொண்டிருக்க மாட்டார். அதற்குப் பதிலாக, தேவனால் - யாவேயால் - அண்டம் படைக்கப்பட்டது என்ற கண்ணோட்டத்தை, மற்ற பழங்கால மக்களின் கண்ணோட்டமான *தேவர்களால்* (பன்மை) அண்டம் படைக்கப்பட்டது என்ற கண்ணோட்டத்திற்கு நேரெதிரானதாக வைத்தல் என்பதே அவரது இலக்காக இருந்திருக்கலாம்.

ஆதியாகமம் 1 மற்றும் 2 அதிகாரங்கள் தோற்றங்கள் பற்றிய உண்மையான விபரத்தை அளிக்கின்றன. மற்றும், பரிணாமக் கோட்பாடு போன்ற, தோற்றங்கள் பற்றி தவறான எந்தக் கண்ணோட்டத்தையும் நாம் எதிர்கொள்ளுகையில், இவ்விரு அதிகாரங்களும் படிக்கப்பட முடியும் மற்றும் படிக்கப்பட வேண்டும். இருப்பினும் ஆதியாகமம் 1 மற்றும் 2 ஆகிய அதிகாரங்களை, அவற்றை முதலில் வாசித்தவர்களால் புரிந்துகொள்ளப்பட்டதைப் போன்றே புரிந்து கொள்வதற்கு, நாம் பரிணாமக் கோட்பாட்டைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. மாறாக நாம், “இந்தப் புத்தகம் முழுமையையும் கண்ணோக்குகையில், இவ்வசனப் பகுதியின் நோக்கம் என்னவாக உள்ளது?” என்று தான் கேட்க வேண்டும்.

முழுமையான வகையில் இந்தப் புத்தகத்தின் நோக்கம் என்னவாக *உள்ளது*? அனேகமாக, ஆபிரகாமுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு மற்றும் அவருடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கை ஆகியவற்றைப் பதிவு செய்துள்ள, ஆதியாகமம் 12:1-3 வசனப்பகுதியானது இந்தப் புத்தகத்தின் முதன்மை நோக்கத்திற்கான குறிப்பை அளிப்பதாக இருக்கலாம். அதற்கு முன் உள்ள ஒவ்வொன்றும் பின்வரும் ஒரு பிரச்சனையை முன்வைக்கிறது: பாவம்! அந்த அழைப்பில் நாம் ஒரு தீர்வைக் கொண்டுள்ளோம்: ஆபிரகாம் மூலமாக எல்லா மக்களினங்களும் ஆசீர்வதிக்கப்படும். ஆதியாகமத்தின் எஞ்சிய பகுதி முழுவதும் ஆபிரகாமின் சந்ததி பற்றியதாக - அது எவ்வாறு இருக்க வந்தது, அது எவ்வாறு உயிர்பிழைத்தது, அது எவ்வாறு வளம் பெற்று பலுகிப்பெருகியது என்பதைப் பற்றியதாக - உள்ளது, ஆபிரகாமுக்கு அவர் மூலமாகக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறும்படி இது நடந்தது என்பதைப் பற்றியதாக உள்ளது. எனவே பாவத்திற்கான தீர்வு ஆபிரகாமுக்கு விடுக்கப்பட்ட அழைப்பிலும் தேர்ந்துகொள்ளப்பட்ட அவரது சந்ததிகளிலும் இருக்கிறது என்பதே ஆதியாகமத்தின் செய்தியாக உள்ளது. மனிதன் எவ்வாறு இருக்க வந்தான் மற்றும் அவன் தேவனுடன் எவ்வாறு தொடர்புபட்டான் என்பதை வெளிப்படுத்துவதன் மூலம், ஆதியாகமம் 1 மற்றும் 2 ம் அதிகாரங்கள் அந்த வரலாற்றிற்கு மேடை அமைக்கின்றன.

ஆதியாகமத்தின் முற்றான செய்தியானது விளக்கம் அளித்தலுக்கு மேலும் மறைமுகக் குறிப்புகளைக் கொண்டுள்ளது. உதாரணமாக, யோசேப்பின் வரலாற்றில் யோசேப்பின் பண்புகள் என்பவை யோசேப்பின் மூலமாக யாக்கோபின் மக்கள் (அல்லது இஸ்ரவேல் மக்கள்) உயிருடன் காப்பாற்றப்பட்டனர் என்பதைவிட அதிகம் முக்கியமான சத்தியமாக இருப்பதில்லை. யோசேப்பின் வரலாற்றின் எந்தப் பகுதியையும் பற்றிய விளக்கம் அளித்தல் அந்த உண்மையை வலியுறுத்த வேண்டும்.

வேதாகமத்தின் ஒரு புத்தகம் எதைப்பற்றியது என்பதை நாம் எவ்வாறு கண்டறிய முடியும்? *அதை முற்றிலுமாக*, ஒரே அமர்வில் *வாசித்தல் என்பது விரும்பத்தக்க வகையில் செய்ய வேண்டிய முதல் விஷயமாக உள்ளது.* ஒரு புத்தகத்தை நாம் முழுமையாக வாசிக்கும்போது, பல வேளைகளில் நாம், அது முதல் வாசகர்கள் கேள்விப்பட்டவகையில் நாம் கேட்பதாக உள்ளது. அதை முழுவதுமாக வாசிப்பதால் நாம் - அவர்கள் செய்தது போன்றே - எழுத்தாளரின் நோக்கத்தையும் அந்த நோக்கத்தை நிறைவேற்ற முயற்சிப்பதில் அவர் எவ்வாறு சென்றார் என்பதைப் பற்றியும் நாம் புரிந்துகொள்ள முடியும்.

எழுதப்பட்ட பல்வேறு ஆதாரமூலங்களின் மூலமாக நாம், வேதாகமத்தின் ஒரு குறிப்பிட்ட புத்தகத்தைப் பற்றிய அறிமுகக் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதில் உதவி பெற முடியும். இருப்பினும், புத்தகத்தை முழுவதுமாகப் படித்தல் மற்றும் அந்தப் புத்தகம் முழுமையும் எதைப்பற்றியது என்பதைப் பற்றி நமது சொந்த முடிவுகளை அடைதல் என்பதன் இடத்தை வேறு எதுவும் எடுத்துக் கொள்ளக் கூடாது. எழுத்தாளர் எதை நிறைவேற்ற முயற்சி செய்தார் மற்றும் வாசகர்கள் அதிலிருந்து பெற்றிருக்கக் கூடிய முதன்மைக் கருத்து என்ன என்பதைக் கேட்பதன் மூலம் அதை வாசிக்கையில், நமக்குநாமே தற்காலிக முடிவுகளை அடைய முடியும். பின்பு நாம் பிற ஆதாரமூலங்களைக் கண்ணோக்க வேண்டும்.

ஒரு புத்தகத்தின் முதன்மை நோக்கம், ஆய்வுக்கருத்து அல்லது செய்தி பற்றி ஒரு முடிவை நாம் அடைந்தபின்பு, அந்தச் செய்தியின் வெளிச்சத்தில் நாம் விளக்கப்படுத்த இருக்கும் வசனப்பகுதியைப் புரிந்துகொள்ள முயற்சி செய்ய முடியும். *வேதாகமத்தின் ஒரு புத்தகத்தினுடைய முதன்மைச் செய்திக்கு நேர்மாறான அல்லது அதன் நோக்கத்திற்குப் பங்களிக்காத எதையும் அந்தப் புத்தகத்தின் எழுத்தாளர் கூறமாட்டார்* என்பது நினைவில் கொள்ளத்தக்க ஒரு நல்ல விதியாக உள்ளது.

---

குறிப்புகள்

[1]இந்தத் தலைப்பானது பின்வரும் பாடங்களில் வேதவாக்கியங்களின் நடைமுறைப் பயன்பாட்டைக் கையாளுகையில் விரித்துரைக்கப்படும். [2]பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணம் (அவற்றில் சில, புதிய ஏற்பாட்டில் திரும்பவும் கூறப்பட்டிருந்து அதனால் நம்மீது கட்டுவிக்கப் பட்டிருந்தாலும்) இன்றைய நாட்களின் மக்களுக்குக் குறிப்பாக நடைமுறைப்படுவதில்லை என்ற கருத்தில் பழைய ஏற்பாடு எடுத்துப் போடப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், பழைய ஏற்பாட்டைப் படித்தல் இன்றைய நாட்களின் கிறிஸ்தவர்களுக்கு, பல வழிகளில் பிரயோஜனம் உள்ளதாக இருக்கிறது (காண்க 2 தீமோத்தேயு 3:16, 17; 1 கொரிந்தியர் 10:11; ரோமர் 15:4). [3]இலக்கியத்தின் மாறுபட்ட இவ்வகைகளுக்கு விளக்கம் அளிப்பது எவ்வாறு என்பது இந்தப் புத்தகத்தின் பிந்திய பாடங்களின் கருத்தாக இருக்கும். [4]சில புத்தகங்கள் - குறிப்பாக, சங்கீதங்கள் மற்றும் நீதிமொழிகள் - வேறுபட்ட எழுத்தாளர்கள் எழுதிய எழுத்துக்களின் தொகுப்பாக உள்ளன. இருப்பினும், சங்கீதம் மற்றும் நீதிமொழிகள் ஆகியவற்றின் விஷயத்திலும்கூட, ஒருவர் அந்தப் புத்தகங்களின் நோக்கம் அல்லது ஆய்வுக்கருத்து பற்றி, புத்தகம் முழுவதையும் கருத்தில் கொண்டு சிலவற்றைக் கூற முடியும். [5]உதாரணமாக, எபிரெயர் புத்தகம் அதை வாசிப்பவர்கள் விழுந்து போவதில் இருந்து காப்பாற்றப்படுதல்

என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது; "மேன்மையானது" - இயேசுவின் மார்க்கம் பழைய ஏற்பாட்டில் அதற்கு இணையாக இருந்த மார்க்கத்தை விட ஒவ்வொரு விஷயத்திலும் மேன்மையானதாக இருந்தது - என்பது அதன் ஆய்வுக்கருத்தாக உள்ளது. எழுத்தாளர் தமது புத்தகத்தை வாசிப்பவர்களுக்கு கிறிஸ்து மற்றும் அவரது வழியின் மேன்மைத்துவம் பற்றி நினைவூட்டுவதன் மூலம் அவர்களை விழுந்துபோவதில் இருந்து காக்க விரும்பினார்.